DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

## CC.No.337/2024

Deposition of witness:LW2/PW1

| Name | இலட்சுமி | Taluk | |
|---|---|---|---|
| Husband's Name | அரிகிருஷ்ணன் | Village | |
| Age | 52 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **07.04.2026.** | | | |

( Accused 1, A3, A4 present, A2 absent. U/s.317 PFA)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கீழ்காங்கேயன்குப்பத்தில் குடியிருப்பு, மேற்கு தெருவில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி ஆதிகேசவன் மற்றும் அரிகிருஷ்ணன் ஆகியோர்கள் முறையே எனது மகன், கணவர் ஆவார்கள். மேற்சொன்ன எனது மகன் ஆதிகேசவன் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்துவிட்டார். பட்டியல் சாட்சிகள் மாணிக்கம், சௌந்தர்ராஜன் ஆகியோர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரி தங்கராசு மற்றும் ஆஜரில்லா எதிரி வெங்கடேசன் ஆகியோர்கள் எனது மூத்தார் மகன்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளான விஜய் மற்றும் இலட்சுமி ஆகியோர்கள், எதிரி தங்கராசின் மைத்துனர் மற்றும் மாமியார் ஆவார்கள். இவ்வழக்கு சம்பவம் கடந்த 2022 ஆம் வருடம் நடந்தது. எனக்கு போதிய படிப்பறிவு இல்லாததால், மாதம், தேதி தற்போது எனக்கு ஞாபகமில்லை. கடந்த 2022 ஆம் வருடம் ஒருநாள், பகல் 1.00 மணியளவில், நானும், எனது மகன் ஆதிகேசவனும் எங்கள் வீட்டில் இருந்தபோது, எதிரிகள் தங்கராசு, வெங்கடேசன், விஜய், இலட்சுமி ஆகியோர்கள் எங்கள் வீட்டின் முன்பு நின்றுக்கொண்டு, அசிங்கமாக திட்டிக் கொண்டிருந்தார்கள். அதை என் மகன் ஆதிகேசவன் எங்கள் வீட்டிலிருந்து அவர்களிடம் கேட்டபோது, எதிரிகள் என் மகன் ஆதிகேசவனை பார்த்து, உன்னைதாண்டா திட்டுகிறோம், தேவடியா பையா என்று அசிங்கமாக திட்டிக்கொண்டே, எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தார்கள். எதிரி தங்கராசு தேக்கங்கட்டையால், எனது மகன் ஆதிகேசவனின் உதட்டில் குத்தினார். எதிரி வெங்கடேசன் பூசமரக்கழியால், எனது மகன் ஆதிகேசவனின் முதுகில் அடித்தார். எதிரி விஜய் முந்திரித்தடியால், எனது மகன் ஆதிகேசவனின் இடதுகாலில் அடித்தார். எதிரி லட்சுமி கையால் எனது இரண்டு கன்னத்திலும் அடித்தார். எதிரி விஜய் எனது சேலையை பிடித்து இழுத்து, என்னிடம் அசிங்கமாக நடக்க முயன்றார், நான் அதை தள்ளிவிட்டு, மயங்கிவிட்டேன். மேலும், எதிரிகள் நால்வரும் மேற்சொன்ன கட்டை, கழியால் எங்கள் வீட்டில் நின்றிருந்த எனது மகனின் இருசக்கர வாகனத்தை அடித்து, உடைத்து சேதப்படுத்தினார்கள். மேற்படி இருசக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் சேதமதிப்பு தற்போது ஞாபகமில்லை. மேலும், எதிரிகள் எங்கள் வீட்டின் வெளிப்புறத்தில் நாங்கள் அடுப்பில் சமைக்கும்போது, அங்கு உட்கார்வதற்காக போட்டு

வைத்திருந்த 3 பிளாஸ்டிக் சேர்களையும், மேற்சொன்ன கட்டை, கழியால் அடித்து உதைத்து சேதப்படுத்தினார்கள். மேலும், வீட்டிற்குள் இருந்த எனது மகனின் டச் செல்போனையும், எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். மேற்படி போன் பற்றிய விவரங்கள் எனக்கு தற்போது ஞாபகமில்லை. மேலும், வீட்டில் நாங்கள் வைத்திருந்த சில பொருட்கள் காணவில்லை என்று பின்னிட்டு, எனது கணவர் என்னிடம் சொன்னார். மேற்படி சம்பவத்தை கேள்விப்பட்டு, எனது கணவர் அரிகிருஷ்ணன் எங்கள் வீட்டிற்கு வந்து, என்னையும், எனது மகன் ஆதிகேசவனையும் ஆம்புலன்ஸ் மூலம் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையில் சேர்த்தார். மேற்படி சம்பவம் பற்றிய தகவலை மேற்படி சம்பவத்தை பார்த்த எங்கள் ஊரைச் சேர்ந்த நபர்கள் என் கணவரிடம் சொல்லியுள்ளார்கள். மேற்படி, வழக்கு சம்பவத்தை மாணிக்கம், சௌந்தர்ராஜன் ஆகியோர்கள் நேரில் பார்த்தார்கள். அவர்கள் இவ்வழக்கில் சண்டையை நேரில் பார்த்த சாட்சியாவார்கள். நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, இவ்வழக்கு சம்மந்தமாக முத்தாண்டிக்குப்ப காவல் நிலைய போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எங்கள் குடும்பத்தில் மொத்தம் 5 நபர்கள், நான், எனது கணவர் அரிகிருஷ்ணன், எனது மகள் வெண்ணிலா மற்றும் எனது மகன்கள் ஆதிகேசவன், பூபாலன். எனது மகன் ஆதிகேசவன் நெய்வேலி, என்.எல்.சியில் பணிபுரிந்தார். எனது மகன் ஆதிகேசவன் கடந்த 09.01.2025 அன்று இறந்துவிட்டார். எனது மகன் வாகன விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான், எனது போலிஸ் விசாரணையில், எங்களது குடும்பத்திற்கும், பரசுராமன் குடும்பத்திற்கும் நிலம் மற்றும் மனை தொடர்பாக முன்விரோதம் இருப்பதாக கூறியுள்ள நிலையில், அதுப்பற்றி நான், என் முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். உண்மையிலேயே எங்களது குடும்பத்திற்கும், பரசுராமன் குடும்பத்திற்கும் நிலம் மற்றும் மனை தொடர்பாக பிரச்சனை இருந்திருந்தால், உரிமையியல் நீதிமன்றத்தில், அது தொடர்பாக நாங்கள் வழக்கு தொடர்ந்திருப்போம் என்றாலும், அவ்வாறு எதுவும் இல்லாததனால் தான் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு எதுவும் தொடரவில்லை என்றாலும், அதனால் தான் அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**2.** எதிரி விஜய் எனது சேலையை பிடித்து இழுத்து, என்னிடம் அசிங்கமாக நடக்க முயன்றார், நான் அதை தள்ளிவிட்டு, மயங்கிவிட்டேன் என்று எனது முதல் விசாரணையில் நான் கூறியுள்ள நிலையில், மீண்டும் நான், எப்போது சுயநினைவு அடைந்தேன் என்றால் 1 மணிநேரம் கழித்து சுயநினைவு அடைந்தேன். மேற்படி நான் மயக்கமாக இருந்த சமயத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி விஜய் எனது சேலையை பிடித்து இழுத்து, என்னிடம் அசிங்கமாக நடக்க முயன்றார் என்று எனது முதல் விசாரணையில் நான் கூறியுள்ள விவரங்களை நான், எனது போலிஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் நான் அதுப்பற்றி போலிஸ் விசாரணையில் கூறினேன், அவர்கள் அதனை எழுதியதாக கூறினார்கள், எனக்கு படிக்க தெரியாததனால், அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை. என்னிடம் பெற்ற வாக்குமூலத்தினை பதிவு செய்ததன் பின்னர், போலிசார் அதனை என்னிடம் படித்துக் காட்டவில்லை என்றால் சரிதான். நான், எனது கணவர் மற்றும் எனது மகன்

ஆதிகேசவன் மூவரும், தாக்கியதில் 1வது எதிரி தங்கராசுக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது, அதன் விளைவாக அவர் கடந்த 20.07.2022 அன்று பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டு, அதனை தொடர்ந்து குற்ற எண்–344/2022 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்து, நான் என்ன சொல்கிறேன் என்றால், சரியல்ல, அவ்வாறு நாங்கள் எதுவும் அடிக்கவில்லை, தங்கராசு தான் மது அருந்திவிட்டு வந்து எங்களிடம் பிரச்சனை செய்தார், அவர் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நாங்கள் அவரை தாக்கியது தொடர்பாக கடந்த 25.07.2022 அன்று பொன்னி மருத்துவமனையிலும் மற்றும் 20.07.2022 அன்று சீனிவாசா ஆர்த்தோ கிளினிக்கிலும் மற்றும் 26.07.2022 அன்று ராஜன் மருத்துவமனையிலும் நுண்கதிர்படங்கள் எடுத்து சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்றாலும், புதுச்சேரி, அபிஷேகபாக்கத்திலும் அவர் மேற்படி காயத்திற்காக மாவுக்கட்டு போட்டிருந்தார் என்றாலும், அவர் என்னவேண்டுமானாலும் சொல்லலாம், அதற்கு நாங்கள் காரணமில்லை. மேற்கண்டவாறு அவருக்கு அடிப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைகள் மேற்கொண்டிருந்ததால், அவர் நான் கூறியதுபோல், எங்களை அடிக்கக்கூடிய நிலையில் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது முதல் விசாரணையில் நான் கூறியுள்ளவாறு எதிரிகள் எங்களை அசிங்கமாக திட்டியதாக சொல்லப்படும் இடம் தனிநபருக்கு சொந்தமான இடம் என்றாலும், பொது இடம் இல்லை என்றாலும் சரிதான். நான், இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக கூறி பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில், மருத்துவரிடம் சிகிச்சை மேற்கொண்டதாகவும், எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி மருத்துவரிடம் என்னை தெரியாத நபர்கள் தாக்கியதாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான், அந்த சமயத்தில் எனக்கு அவர்களது பெயர்கள் தெரியாது. என்னை எத்தனை தெரியாத நபர்கள் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு, நான் மேற்படி மருத்துவரிடம் கூறவில்லை என்றால், சரிதான், ஏனென்றால், எதிரி தங்கராசுவின் சொந்தக்காரர்கள் எங்கள் ஊரில் இருப்பவர்கள் அல்ல, அவர்கள் நெய்வேலியில் வசிக்கிறார்கள், அவர்கள் பெயர் தெரியாததனால் அவ்வாறு தெரியாது என்று கூறிவிட்டேன். உண்மையிலேயே எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியும் என்றாலும், எதிரிகள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் மருத்துவமனையில் இருந்ததனால், அவர்கள் எங்களை உண்மையிலேயே தாக்காததனால் தான், அவர்கள் பெயரை குறிப்பிட்டு நான் மருத்துவரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளும், ஆஜரில்லா எதிரியும் கடந்த 20 வருடங்களாகவே நெய்வேலியில் தான் வசிக்கிறார்கள் என்றாலும், அவர்கள் கடந்த 5, 6 வருடங்களாக எங்கள் ஊரில் தான் வசிக்கிறார்கள்.

3. எனது முதல் விசாரணையில், நான் எதிரிகள் எங்கள் வீட்டு சேரை உடைத்ததாகவும், போனை எடுத்துச் சென்றதாகவும் கூறியுள்ள விவரங்களை எனது போலிஸ் விசாரணையில் கூறினேனா என்றால், நான் கூறினேன், அதனை போலிசார் எழுதாமல் விட்டுவிட்டார்கள். மேற்படி பொருட்கள் உடைந்துபோனது தொடர்பாக ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை வீட்டில் வைத்துள்ளேன், போலிசாரிடம் இதுப்பற்றி கூறியபோது, அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு வரும்போது கூறிக்கொள்ளுமாறு சொன்னார்கள். எங்களது வண்டியை எதிரிகளாக குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் உடைத்துவிட்டதாக மேற்படி எனது முதல் விசாரணையில் நான் கூறியுள்ள நிலையில்,

அதுப்பற்றிய மதிப்பீடு சான்றிதழ் ஏதேனும் ஆர்.டி.ஓ விடமிருந்து போலிசார் பெற்றனரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில், ஆஜர் 3வது எதிரி விஜய் என்.எல்.சியில் ஒப்பந்த தொழிலாளராக பணியில் இருந்தார் என்றால், அவர் அன்று நேரடியாக வந்து எங்களை தாக்கினார்கள். ஆஜர் 3வது எதிரி விஜய் என்.எல்.சியில் ஒப்பந்த தொழிலாளராக பணியில் இருந்தது தொடர்பான ஆவணம் அவரிடம் உள்ளது என்றாலும், அதனை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளார் என்றாலும், அதுப்பற்றி நான் என்ன கூறுகிறேன் என்றால், அவ்வாறு எதுவும் உண்மையாக இருக்கும் பட்சத்தில், எனக்கு தனிப்பட்ட முறையில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை, ஏனென்றால் அவர் அன்று வழக்கு சம்பவத்தில் எங்களை தாக்கினார் என்பதுதான் உண்மை. அவ்வாறு அவர் அன்று பணியில் இருந்ததனால், எங்களை தாக்கியிருப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 4வது எதிரி என்னை கன்னத்தில் தாக்கியதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில், அது தொடர்பாக எவ்வித மருத்துவ ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், உண்மையிலேயே அவ்வாறு அவர் தாக்கவேயில்லை என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு சம்பவம் நிகழ்ந்திருந்தால், நான் மருத்துவரிடம் அதுப்பற்றி கூறியிருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லாததனால் தான், மருத்துவர் அதுப்பற்றி விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல.

4. நான் பண்ருட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, என்னை பண்ருட்டி போலிசார் விசாரணை செய்தார்களா என்றால், செய்தார்கள். என்னை மேற்படி போலிஸ் அதிகாரி எந்த தேதியில் விசாரித்தார் என்றோ, விசாரணை செய்த அதிகாரியின் பெயரோ தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, அவை எல்லாம் எனது மகனுக்கு தான் தெரியும். சம்பவம் நடந்த சத்தம் கேட்டு, சௌந்தர்ராஜன் மற்றும் மாணிக்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்ததாக நான் கூறியுள்ளதால், சம்பவம் நடந்ததை அவர்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டு அவர்கள் ஓடி வருவதற்குள், எதிரிகள் அனைவரும் ஓடிச்சென்றுவிட்டார்கள். எதிரிகள் எங்களை தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் கழியை போலிசார் கைப்பற்றினார்களா என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது, ஏனெனில் நான் 1 வாரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். உண்மையிலேயே அவ்வாறு வழக்கு சம்பவம் நடந்திருந்தால், எதிரிகள் எங்களை தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் கழியை போலிசார் கைப்பற்றியிருப்பார்கள் என்றாலும், வழக்கு சம்பவமே நடக்கவில்லை என்பதனால் தான், போலிசார் ஆயுதங்கள் எதனையும் அவ்வாறு கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல.

5. 2022 ஆம் ஆண்டு, 7வது மாதம், 1வது எதிரிக்கு குழந்தை பிறந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த குழந்தையை 4வது எதிரி பராமரித்து வந்தார் என்றாலும், அதனால் குழந்தையை பார்த்துக்கொண்டிருந்த அவரால் என்னை தாக்கியிருக்க முடியாது என்றாலும், அவர் என்னை கன்னத்தில் தாக்கியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தங்கராசுவும், அவரது அண்ணன் வெங்கடேசுவும் மருத்துவமனைக்கு தங்கராசுவின் கையில் அடிப்பட்டிருந்தது தொடர்பாக சென்றுக்கொண்டிருந்ததனால் அவர்கள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டிருக்க வாய்ப்பேயில்லை என்றாலும் சரியல்ல. மருத்துவமனைக்கு நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து செல்லப்பட்டதாக எனது முதல் விசாரணையில், நான் கூறியுள்ள விவரங்களை மருத்துவரிடம் நான் கூறினேனா என்றால், கூறினேன்.

மருத்துவர் அவ்வாறு எதுவும் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. எங்கள் வீட்டு பக்கத்தில், வேல்முருகன், தங்கவேலு, சண்முகம் ஆகியோரது வீடுகள் உள்ளன. மேற்கண்ட நபர்களை இவ்வழக்கின் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால், மேற்கண்ட நபர்களை இவ்வழக்கின் சாட்சிகளாக சேர்த்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறு சம்பவம் நடக்காததனால் தான் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல, அவர்கள் எல்லாம் எங்களுக்கு சண்டைக்காரர்கள். நாங்கள் தங்கராசுவின் கையை அடித்து உடைத்தனால், அவர் தாக்கல் செய்திருந்த வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், ஆஜரில்லா எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**1.** எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையின்போது, மேற்படி மருத்துவரிடம் என்னை தெரியாத நபர்கள் தாக்கியதாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான், அந்த சமயத்தில் எனக்கு அவர்களது பெயர்கள் தெரியாது என்று சொல்லியுள்ள நிலையில், எதிரிகள் தங்கராசு, வெங்கடேசன் எனது மூத்தார் மகன்கள் என்பதால், அவர்கள் பற்றிய விவரம் தெரியும், ஆனால் தங்கராசுவின் மைத்துனர் விஜய் மற்றும் அவரது மாமியார் இலட்சுமி ஆகியோர்களது பெயர் சம்பவத்தின்போது, எனக்கு தெரியாததால், மருத்துவர் என்னை விசாரிக்கும்போது நான் பொதுவாக தெரியாத நபர்கள் என்று கூறிவிட்டேன்.

2. வழக்கு சம்பவம் நடைபெற்ற இடமானது முத்தாண்டிக்குப்ப காவல் நிலைய எல்லை அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும், இந்நிலையில், எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையின்போது, நான் பண்ருட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, என்னை பண்ருட்டி போலிசார் விசாரணை செய்தார்களா என்றால், செய்தார்கள் என்று எதனடிப்படையில் சொன்னேன் என்றால், எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையின்போது, போலிசார் விசாரித்தது சம்மந்தமாக கேட்கிறார்கள் என்று அவ்வாறு சொன்னேன். இவ்வழக்கு சம்மந்தமாக என்னை முத்தாண்டிக்குப்ப காவல் நிலைய போலிசார் தான் விசாரித்தார்கள்.

**மேற்படி எதிரிகள் மேற்சொன்ன வாகனத்தையும், பிளாஸ்டிக் சேர்களையும் உடைத்து சேதப்படுத்தியது சம்மந்தமாகவும், வீட்டில் இருந்த எனது மகனின் செல்போனை எடுத்து சென்றது சம்மந்தமாகவும், ஆவணம் என்னிடம் உள்ளது. அதனை நான் தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை, போதிய காலஅவகாசம் அளித்தால், அதனை நான் சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மறுவிசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது.**